# மின் நிலா



ஜூன் 1 2020  நிலா 002



*engalblog.blogspot.com*

---

=====================================================

## "எங்கள் ப்ளாக்" வலைப்பூவின் வாராந்தர வெளியீடு.

=====================================================

மின் நிலா பற்றிய
உங்கள் கருத்துகளை engalblog@gmail.com  மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

=====================================================

# " உங்களுடன் அரட்டை "

**ஆசிரியர்களின் கருத்துகள் ...**

ஒரு வாரத்துப் பதிவுகளை ஒரு திரட்டாகப் படிக்கத் தரலாம் என்ற எண்ணம் வந்த போது அதற்கு ஒரு முகப்புப் படம், கூடவே வெறும் நகலாக இல்லாமல் அதிகப்படியாக ஒன்றிரண்டு அம்சங்கள் சேர்க்கப் பட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

"தலையங்கம்" "எடிட்டோரியல்" என்பதெல்லாம் ரொம்பப் பெரிய அடையாளங்கள். அவற்றைச் சரிவர நிர்வகிக்க ஆழ்ந்த அறிவும் கவனமும் சற்றே உயர்வான அமர்வும் தேவை. அவை ஏதும் இங்கு அவுட் அஃப் ஸ்டாக் ஆனதால் "உங்களுடன் அரட்டை" எனும் பாணியில் எழுத முனைகிறோம். சரியாக வராத பட்சத்தில் போட்டு விட்டு ஓட வசதியான பகுதி !

எனவே எது குறித்தும் பேசலாம். நீளம் ஆழம் நம் வசதி.

எனக்கு " விவரம் தெரியும்" வயது வந்த சமயம் இரண்டாம் உலகப்போர் உச்ச கட்டத்தில் இருந்த நேரம். ரேஷன் கடைகளில் ரொட்டிகளுக்குக் கூப்பன் வாங்கி பேக்கரியில் காசு கொடுத்து வாங்க வேண்டும். கடலைப்பருப்பு, அச்சு வெல்லம் கூட ரேஷனில் வாங்க வேண்டும். தலைக்கு ஆறு அவுன்ஸ் அரிசி மட்டுமே. பாக்கி எல்லாம் எப்படியோ, அரிசி புழுக்கள், கல், மண் தூவிதான் பெரும்பாலும் வரும். அரிசியில் கல் நீக்குவது ஒரு கலை. சில சமயம் புழுங்கல் அரிசி மட்டுமே கிடைக்கும். ரேஷன் அரிசி ஜோக்குகள் பத்திரிகைகளில் பிரபலம்.

"நாளை முதல் ரேஷன் கிடையாது" என்று திடீரென ஒரு நாள் தைரியமாக அறிவித்தது ராஜாஜி என்று நினைவு.

அந்தக் கஷ்டமான நாட்கள் தற்போது பலருக்கும் கற்பனை செய்து பார்க்க முடியுமா என்று தெரியவில்லை. பார்க்கப் போனால் இன்று பல குழந்தைகளுக்கு அரிசி என்பது நெல்லிலிருந்து வருவது என்று கூடத் தெரியவில்லை. பலர் சூரிய உதயத்தைப் பார்த்து அறியாதவர்கள். இயற்கையோடும் வெளியுலகத்துடனும் தொடர்பின்றி ஒரு தலைமுறை வளர்ந்து வருகிறது என்பது ஒரு சோகமான உண்மை. பலருக்கும் தாய்மொழியில் அரைகுறையாகப் பேச மட்டுமே தெரியும். (அது என்ன, இங்கிலீஷில் சொல்லு). பொன்னியின் செல்வன், சுஜாதா கதைகள், காளமேகத்தின் சொல்லாட்சி எல்லாம் கண்காணாமல் ஆவியாகிவிடுமோ என்ற அச்சம் எழுகிறது.

வாய்க்கால் நீரில் பல்தேய்த்து, குளம் அல்லது ஆற்றில் குளித்து துணிகளை சவுக்காரம் (அப்டீன்னா என்ன?) போட்டு கல்லில் அடித்துத் துவைத்த அந்த லைஃப் ஸ்டைல் இனிக் காணக் கிடைக்காது. இது காலத்தின் கட்டாயம். வருத்தப்பட ஏதுமில்லை.

அந்த காணாமல் போன நாட்களில் மனதில் ஆழப் பதிந்த சித்திரங்கள் ஏராளம். அந்தக் காலத்து விலைவாசியே சுவாரசியமான கதைபோல இருக்கும்.

நினைவில் நிலைத்தவற்றை எழுத்தில் போட எண்ணம். வரவேற்பைப் பொறுத்து தொடரலாமா என்று பார்ப்போம்..

*****

**அந்தக் காலத்தில் ...**

சவர்க்காரம் போட்டு துணி துவைத்தோம், அதே குளத்தின் வடகிழக்கு மூலையில் கரிப் பாத்திரம் தேய்த்தோம், தென்கிழக்கில் மாடு குளிப்பாட்டினோம்,தென் மேற்கில்..? சொல்லவேண்டுமா என்ன!

ஆனால் குளத்து நீரில் தைரியமாகக் குளித்தோம்.

என்னாளிலும் ஆற்றிலிருந்து கொண்டுவந்த தண்ணீரை அப்படியே குடித்தோம்.

இரவு சோற்றில் ஊற்றிய நீர் மறுநாள் காலை உணவு ஆயிற்று. ஆனால் இப்போது நீர் ஊற்றிய சாதம் மஞ்சளாக நுரைக்கிறது?

மாடு குளிப்பாட்டிய நீரே மேல்?

👍 👍 👍

" பெரிசுங்களுக்கு அந்தக் காலத்தைப் பற்றி அரற்றுவதே வாடிக்கையாகப் போய்விட்டது " என்று அடுத்த தலைமுறைகள் எண்ணலாம். இது பிரலாபம் அல்ல. நடப்பில் இருந்த வாழ்க்கை முறைக்கு  ஓர் அறிமுகம் என்று சொல்லிக் கொள்வது தற்காப்பு.

இதுவே தொடர்ந்து வரும் என அஞ்ச வேண்டாம்.  வேறு வேறு பொருள் பற்றிப் பேச நிறைய இருக்கிறது.

👍 👍 👍

" காலம் கெட்டு கிடக்கு "
என்பது நாம் பிறந்த நாள் முதல் கேட்டு வரும் வசனத்தில் மாற்றமில்லை ஆனால் சுட்டு ஒன்றே இல்லை.

நாம் எப்பொருள் பற்றிக் கேள்வி கேட்டாலும் அது இப்போ எதுக்கு உனக்கு என்ற பதில் நிறைய முறை நம்மை எதிர் கொண்டிருக்கிறது!

காரணத்தை அறிய முற்பட்டால் நம் அறியாமை தொடர்வது நல்லது என்று நினைத்த பெரியவர்கள் முதல் தமக்கும் தெரியாது என்பதற்கு கண்டிப்பு சட்டை போட்ட பெரிசுகள் வரை தெரிய வரும்.

வீட்டுப் பெரியவர்கள் சொல்லத் தயங்கிய சில விஷயங்களை  விவரங்களை சில புத்தகங்கள், மற்றும் நண்பர்கள் safe லெவலுக்கு சொல்லிக் கொடுத்தனர். ஆனால் இப்போ இன்டர்நெட் ஆசான் limit இல்லாமல் செய்வது மாதிரி இருக்கு.

😛 🤪 😝

==========================================================

'திரட்டிப் பால்' - ரமா ஸ்ரீனிவாசன் ரெசிப்பி .

**வேண்டிய பொருட்கள் :**

**பால் – ஒரு லிட்டர்**

**சர்க்கரை – 1 கப் (சுமாராக 100 கிராம் அல்லது உங்கள் விருப்பத்திற்கேற்ற படி)**

**திரட்டிப் பால் காய்ச்சுவதற்கு வேண்டிய காப்பர் பாட்டம் பாத்திரம் அல்லது வெங்கல உருளி.**

**அந்நாட்களிலிருந்து இந்நாட்கள் வரை நம் இல்லங்களில் எந்த சுப காரியத்திற்கும் திரட்டிப் பால் ஒரு கட்டாய இனிப்பாகும். பல வீடுகளில் அந்த காலத்தில் பசு மாடுகள் வளர்ந்ததால், அது கன்னுக் குட்டி போடும் போது ஒரு நாளைக்கு எட்டு அல்லது 4 லிட்டர் பால் சுரக்கும். இதற்கு சீம்பால் என்று பெயர். கன்னுக் குட்டி மிஞ்சினால் ஒரு டம்ளர் பால் அருந்தும். பசுவின் பாலைக் கறக்கவில்லை என்றால் பால் கட்டிக் கொண்டு மாட்டிற்கு ஜுரம் வரும். எனவே, முதலாம், இரண்டாம் நாள் பாலை வீடுகளில் அருந்தாமல்**

வாய்க்கால்களில் விடப் படும். மூன்றாம் நாள் பாலை எடுத்து வெல்லம் அல்லது கருப்பட்டி கலந்து திரட்டிப் பால் செய்து குழந்தைகளுக்கு விநியோகம் செய்வார்கள். நல்ல கொழுப்பு சத்துள்ள பாலில் செய்தது என்பதனால் பெரியவர்கள் உண்ண மாட்டார்கள். சிவப்பு நிறமாய் இருக்கும்.

திரட்டிப் பால் வெள்ளையாக இருக்க பாலை பாதி பாதியாக பகிர்ந்து கொண்டு முதலில் ஒரு பாதியை காய்ச்சி சிறிது சுண்டிய பின் மறு பாதியையும் சேர்த்து காய்ச்ச காய்ச்ச வெள்ளை வர்ணம் மாறாமல் இருக்கும்.



பால் காய்ச்ச காய்ச்ச ஒரு நல்ல வாசம் வரும். பால் நன்றாக வத்த வேண்டும். நீர் சத்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். சுமார் 45 நிமிடங்கள் கை விடாமல் கிளறிக் கொண்டே இருந்தால், சீராக தோசை மாவு பதத்திற்கு மாறும்.



பின்னர் சக்கரை சேர்க்க வேண்டும். சர்க்கரை சேர்த்தவுடன் பால் சிறிது நீர்க்கும். கிளறிக் கொண்டே இருந்தால் 10 நிமிடங்களில் கெட்டிப் படும். சிவந்து போகாமல் பேனின் ஓரங்களில் ஒட்டாமல் வரும்போது கீழே இறக்கி வைத்து சிறிது ஆற விட்டால் இன்னும் சிறிது கெட்டிப் பட்டு முழு திரட்டிப் பாலாக மாறி விடும்.



==============================================

கருத்துரை சில :

Geetha Sambasivam இன்னொரு எளிதான முறை. ஒரு முழு டப்பா மில்க்மெயிடை மைக்ரோவேவ் பாத்திரத்தில் மாற்றிக் கொண்டு ஒரு டேபிள் ஸ்பூன் தயிரை அதில் சேர்த்துக் கலக்கிவிட்டு மைக்ரோவேவில் சில நிமிடங்கள் வைத்து எடுத்தால் உடனடித் திரட்டுப் பால் தயார்.

Bhanumathy Venkateswaran பால் நன்றாக கொதிக்கத் தொடங்கியதும் கொஞ்சம் தயிரை அதில் சேர்த்தால் பால் சீக்கிரம் திரிந்து வெள்ளையான திரட்டுப் பால் கிடைக்கும். முன்பெல்லாம் திரட்டுப்பால் கிளறுவதற்காகவே வெங்கல உருளி வீடுகளில் இருக்கும். குமுட்டி அடுப்பில்தான் திரட்டுப் பால் காய்ச்சுவார்கள்.

கீதா ரெங்கன் :

திரட்டுப்பாலுக்கு நெய் சேர்க்காமலேயே கறந்த பாலில் காய்ச்சி திரண்டு வரும் போதே நெய் விடும்..கறந்த பால் சில சமயம் தண்ணியா இருக்கும் (குறிப்பா பசும்பால்) அப்படினா கொஞ்சம் கோல்டன் ப்ரௌன் கலரில் வரும்ம் திரட்டுப்பால். ரொம்ப டேஸ்டியா இருக்கும். ஸோ வீட்டுல இதுக்குன்னே கறக்கற வீட்டுல சொல்லி வைச்சு தண்ணி விடாமல் வாங்கிவருவாங்க. கூடக் கொஞ்சம் காசு கொடுக்க வேண்டி வரும். இதெல்லாம் ஊர்க்க்கதை. அப்புறம் நான் செய்தது பெரும்பாலும் பாக்கெட் பால் தான். சில சமயங்களில் மட்டுமே கறந்த பால் பாண்டிச்சேரியில் இருந்த வரை கறந்த பால் தான். சென்னையிலும் கறந்தபாலும் வாங்குவதுண்டு.

================================



=======================================

## கேட்டு வாங்கிப் போடும் கதை :

## ரேடியோ பெட்டி - துரை செல்வராஜூ



துரை செல்வராஜூ
==============

" ஜோதி.. ஜோதீ!... "

" என்னம்மா!..   இதோ வந்துட்டேன்!... "

குரல் அருகாமையில் கேட்பது போலிருந்தாலும் உண்மையில் அடுத்த வீட்டு முற்றத்திலிருந்து கேட்கிறது....

பழங்காலத்து மச்சு வீடு..  வீட்டின் நடுவே முற்றம்.. சுற்றி வர உள் நாழி..

இந்த வீட்டின் கீழண்டையில் எப்படி அறைகள் இருக்கின்றனவோ அதேமாதிரி அந்த வீட்டின் மேலண்டைப் புறம் அறைகள்...

மொட்டை மாடியில் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் சமச்சீராக ஒவ்வொரு அறை...

இந்த வீட்டின் உள்ளிருந்து படிகளில் ஏறினால் மொட்டை மாடியில் நடந்து அந்த வீட்டின் உள்ளே இறங்கி விடலாம்...

இரு குடும்பங்களும் ராசியாக இருப்பதனால் மேல் மாடியில் தடுப்பு கட்டப்படவில்லை...

கூட்டுக் குடும்பம் இருந்த வீடு ஏதோ ஒரு காலத்தில் இரு கூறாக கிரயம் ஆகி - இப்போது தனித்தனியாக... வேறு வேறு பட்டா பாத்திய அனுபோகங்களில்...

இருந்தாலும் முற்றத்தின் அந்தப் பக்கத்திலிருந்து அவ்வப்போது "விசாலம் ... வத்தக் குழம்பு தாளிக்கிறயா!... -" என்று கேள்வி வரும்...

" ஆமா... நீலாம்மா!... பாப்பாக் கிட்ட கிண்ணம் கொடுத்து விடுங்க!... "
- என்று இங்கிருந்து பதில் போகும்...

பாப்பா..ன்னு சொல்றது சும்மா ஒரு பேச்சுக்குத்தான்...
பதினேழு முடிஞ்சி பதினெட்டு நடக்குது... பேரு நீலா - நீலாம்பிகா...

அந்த மாதிரி இந்தப் பக்கத்திலயும் அதே வயசுல ஒரு பாப்பா...
ஒருத்திக்கு ஒருத்தி ரெண்டு மாச வித்தியாசம்... அவ்வளவு தான்!..

பேரு!?..

முதல் வரியில வாசிச்சிருப்பீங்களே!... அதான்...

சில விநாடிகளில் கொலுசுகள் சிலுங்... சிலுங்.. என்று ஒலிக்க
தாவணித் தாமரையாய் ஓடி வந்தாள் ஜோதி...



" வெளக்கு வைக்கிற நேரத்தில வீட்டுல இல்லாம!.. ".
- துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த மகளை விசாலம் எதிர்கொண்டாள்...

ஜோதி பக்கத்து வீட்டில்
நீலாவுடன் பேசிக்கொண்டிருந்தது விசாலத்துக்குத் தெரியும்...

இருந்தாலும் இந்த விசாரணை சும்மா ஒப்புக்கு!...

" அஞ்சு மணி தானம்மா ஆகுது!... " - ஜடைகள் ரெண்டும் இப்படியும் அப்படியுமாக ஆடின...

" அதுக்காக... வயசுப் பையன் இருக்குற வீட்டுல என்ன ஜோலி?..
கையைக் காலைக் கழுவிட்டு வாசல்ல தண்ணி தெளிச்சு ஒரு
கோலத்தைப் போடலாம்!... மாடத்து விளக்கை எடுத்து விளக்கி மஞ்ச
குங்குமம் வைக்கலாம்!.. நாளைக்கு ஒரு வீட்டுக்கு வாழப்போற பொண்ணுக்கு
இதெல்லாம் தினப்படி சொல்லியாத் தரணும்?... "

அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டதும் ஒன்றைச் சொல்ல நினைத்தாள் ஜோதி
.. ஆனால் - சொல்வதற்கு வாய் வரவில்லை...

" நீலாவோட அண்ணன் திருச்சியில இருந்து ரேடியோ வாங்கியாந்துருக்காங்க...
அதைப் பார்க்கத்தான் போனேன்...
நான் ஒன்னும் நானாப் போகலை... நீலா தான் கூப்பிட்டா!... "

மகளின் வார்த்தைகளைக் கேட்டதும் தாயின் மனம் தவித்தது - ஒன்றைக்
கேட்பதற்கு... ஆனால் கேட்கவில்லை... இருந்தாலும் -

" ஏன் நீ ரேடியோ பார்த்ததில்லையா?.. " - என்றாள்..

" இது புது மாடலா இருக்கும்மா... டிரான்சிஸ்டர்..ன்னு சொல்றாங்க...
பேட்டரி கட்டை போடறது... கரண்டு தேவையில்லையாம்!... "

" ஆமா.. கரண்டுக்குப் பதிலாத் தான் பேட்டரிக் கட்டை போடுறோமில்லே!.. பாடத்
தானே வேணும்!... காலம் போற போக்குல கரண்டு கம்பிய விட்டா படம் காட்டுற
பொட்டி தான் இன்னும் வரலே!... "

" கவலப்படாதேம்மா.. அதுவும் கொஞ்ச நாள்.. ல வந்துடும்... "

சிரித்தாள் ஜோதி...

" நானும் உங்கப்பாக் கிட்டே சொல்லிக்கிட்டு தான் இருக்கேன்....
ஒரு ரேடியோப் பொட்டி வாங்கி வைங்க...ன்னு.. அது எதுக்கு வெட்டிச் செலவு..
..ன்னு கேக்க மாட்டேங்கிறாங்க... "

" லைசென்ஸ்.. எல்லாம் எடுக்கணுமாமே... லைசென்ஸ் பணம் கட்டலே..
ன்னா புடுங்கிக்கிட்டுப் போய்டுவாங்களாமே!... "

" ஆமா... அப்படித்தான் .. போஸ்ட்டாபீஸ்... க்குப் போயி பணம் கட்டணும்!... "

அப்படி இப்படி விசாரணை முடிவில் உடனடியாகத் தண்டனை...

" அது கெடந்துட்டுப் போவுது.. நாஞ் சொன்ன வேலையைப் பாரு...
மணி அஞ்சரை ஆச்சு... இன்னிக்கு வெள்ளிக்கிழமை... சாம்பிராணி
போடணும்.. தூபக்கால்...ல கரியைப் போட்டு நெருப்பு உண்டாக்கு... "

" சரிம்மா!... " - என்றபடி பாவாடையைத் தூக்கிச் செருகிக் கொண்டு
வாசலைக் கூட்டுதற்கு ஆயத்தமானாள் ஜோதி...

தண்ணீர் வாளியுடன் வெளியே சென்ற ஜோதி திடீரென சப்தம் போட்டாள்..

" அம்மா.. அம்மா!.. இங்கே வாயேன்!... "

என்னவோ ஏதோ என்று அதிர்ச்சியுடன் வாசலுக்கு விரைந்தோடினாள் விசாலம்..

வலக் கையில் ஒரு அட்டைப்பெட்டி.. இடது தோளில் தொங்கு பை..
முக மலர்ச்சியுடன் நின்றிருந்தான் - அருண்..

விசாலம் குருசாமி தம்பதியினருக்கு முதற்பிள்ளை - அருண் .. ஏரல் சேர்மன்
ஸ்வாமிகளிடம் மடியேந்தி பெற்ற பிள்ளை.. அதனாலேயே அருணாசலம் என்று
பெயர்..

அருண் - அருணாசலத்தைக் கண்டதும் விசாலத்துக்கு திக்கென்றது...

" என்னய்யா!... ஒரு வார்த்தை கூட எழுதிப் போடாம வந்து நிக்கிறே!... "

அண்ணனின் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு
அவன் மீது சாய்ந்து கொண்டாள் ஜோதி...

" திடீர்..ன்னு லீவு விட்டுட்டாங்க...ம்மா!... " - என்றான் அருண்..

" கடையில அப்பாவை பார்த்துட்டு தானே வர்றே!.. "

பஸ்டாண்டிலிருந்து கடைத்தெரு வழியாகத் தான் வீட்டுக்கு வரவேண்டும்...

பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்துக் கடை..

வள்ளியம்மாள் வெல்ல மண்டி.. விசாலத்தின் மாமியார் பெயர்...

நாற்பது வருசத்துக் கடை.. வெல்லம் சர்க்கரை மொத்த வியாபாரம்...
தை மாசிக்குப் பிறகு உளுந்து பயறு நிலக்கடலை வியாபாரமும் உண்டு

" ஆமா... கடைக்குத் தான் போனேன்... அப்பா கடையில இல்லை!... "

"எங்கே போனாங்களாம்?... "

கரும்பு சாகுபடிக்காரங்களுக்கு பணம் கொடுக்கப் போயிருக்காங்களாம்..
கணக்கப் பிள்ளை சொன்னார்...

முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பெல்லாம் இந்தப் பக்கத்தில் கரும்பு
விவசாயிகளுக்கு நம்பிக்கையின் பேரில் வெல்ல மண்டி வியாபாரிகளே
ஆயிரம் ரெண்டாயிரம் என்று முன்பணம் கொடுத்து விடுவார்கள்...

ஆங்காங்கே திருப்பனந்தாள், சோழபுரம், கருப்பூர் - என்று
கருப்பங் கொல்லைகளிலேயே ஆலை போட்டு கரும்பைப் பிழிந்து
காய்ச்சி சர்க்கரை வெல்லம் என்று பார வண்டிகளில் ஏற்றி வந்து மண்டிகளில்
சேர்த்து விட்டு மார்க்கெட் நிலவரப்படி மீதி பணத்தைப் பெற்றுக் கொள்வார்கள்...

ஆனால் சாகுபடிக்காரர்களை அலைய விடக்கூடாது என்று
ஐயாவிடம் பால பாடம் படித்து விட்டு கடையில் அமர்ந்து இருப்பதால்
விவசாயிகளின் வீடு தேடிச் சென்று பணத்தைக் கொடுத்து நேர் செய்து விடுவார் -
குருசாமி.

அந்த வெள்ளந்தி மக்களும் தஞ்சாவூர்..ல இருந்து அண்ணாச்சி ரொக்கம்
கொண்டாந்து இருக்காங்க!.. - என்று கயிற்றுக் கட்டிலை இழுத்துப் போட்டு
உபசரிப்பதும் அண்ணன் தங்கையாக உறவு கொண்டாடுவதும்...

கருப்பஞ்சாறு, வெல்லப்பாகு - இதெல்லாம் மகிழ்வோடு கொடுத்து
புள்ளைகளுக்குக் கொடுங்க!.. - என்று புன்னகைப்பதும்...

இந்த சந்தோஷத்துக்காகவே அவர்களைத் தேடிச் செல்வார் குருசாமி...

" சரி.. சரி... உள்ளே வா!... "

பெட்டியை எடுத்துக் கொண்டு வீட்டினுள் ஓடிய ஜோதி அதை கூடத்தில்
சாமி மாடத்தின் கீழ் வைத்து விட்டு வாசலுக்கு ஓடி வந்தாள்...

வாசலில் தூசி அடங்கத் தண்ணீர் தெளித்தாள்... இரட்டை இழையாய் நட்சத்திரக்
கோலம் போட்டாள்...

மார்கழி இருபத்தைஞ்சாச்சு.. பொங்கலுக்கு இன்னும் அஞ்சு நாள் தான்...

நாளைக்குக் காலைல... சங்குக் கோலம் போடணும்.. மனதில் நினைத்துக்
கொண்டாள்...

கோல மாவு கிண்ணத்தை நிலை மாடத்தினுள் வைத்து விட்டு
வீட்டுக்குள் ஓடினாள்...

" அண்ணே!.. என்ன... ண்ணே இளைச்சு போயிருக்கீங்க!... "

" ஒழுங்கா நேரா நேரத்துக்கு திங்கணும்.. தூங்கணும்!... அது ரெண்டுந்தான்
கிடையாதே.... ஹாஸ்டல் விட்டா காலேஜ்.. காலேஜ் விட்டா ஹாஸ்டல்... ரெண்டும்
விட்டா சினிமாக் கொட்டாய்... "

" இதெல்லாம் இங்கே வந்து யாரு சொன்னது?... " - அதிர்ந்தான் அருண்..

" ஆளுங்க வேற வந்து சொல்லணுமாக்கும்... " - விசாலம் சிரித்தாள்..

அடுத்த வீட்டு கார்த்தி காலையில கிளம்பினானே!... அவனோட வேலையாத்
தான் இருக்கும்!... - என்றபடி அருண் யோசித்தான்..

" அந்தப் பையன் மத்தியானமா வந்திருக்கான்... நான் இன்னும் போய்
பார்க்கவும் இல்லை.. என்னா.. ஏதுன்னு.. கேக்கவும் இல்லை... அந்தப்
பையன் தங்கமான புள்ளை!... "

அவசரமாக பதிலுரைத்தாள் விசாலம்...

" அப்போ நான் மட்டும் தங்கம் இல்லையா?.. "

அருணாசலத்தின் குரலில் ஏக்கம்...

" என் ராசா!...உனக்கு என்னய்யா குறை?... நீயும் தங்கம் தான்!... அம்மா உன்னைய விட்டுக் கொடுப்பேனா!... ஏரல்.. சேர்மன் சாமிகளோட வரமல்லோ நீ!... அதனால தானே அவுக பேரை வச்சு அருண்...ன்னு கூப்புடுறோம்!... "

அதற்குள் கையில் காபி குவளைகளுடன் வந்தாள் ஜோதி...

" நான் யார் கொடுத்த வரமாம்!... " - ஜோதி ஆவலுடன் பரபரத்தாள்...

" நீ எங்க நாச்சியா கொடுத்த வரம்... அதனால தான் ஜோதி.... ன்னு பேரு!... "

" அது ஏம்மா.. அங்கே சிவகாசியில... அடுக்கு விளக்கு அண்ணாமலையார்.. பெரிய குத்து விளக்கு உண்ணாமலையாள்.. ந்னு இருக்கு?... "

" உண்ணாமலையாள் இல்லேடா செல்லம்!... உண்ணாமுலையாள்... குலதெய்வத்தோட பேரைச் சரியாச் சொல்லணும்.. எல்லாத்துக்கும் ஒரு அர்த்தம் இருக்கு... "

விழிகள் மலர தலையை ஆட்டினாள் ஜோதி...

" விளக்கு தானேம்மா ஆதி வழிபாடு.. அதுவும் இல்லாம முப்பாட்டனுக்கும் முப்பாட்டனுக்கும் முந்தி அவுக எல்லாம் குடும்பம் நடத்துன வீடு அம்மா அது.. அது கோயிலான குடும்பம்!... எந்தக் காலத்திலயோ ஏத்தி வச்ச விளக்கு... இன்னைக்கும் சுடர் விட்டுக்கிட்டு இருக்கு... அண்ணாமலையாரே!... "

கன்னத்தில் போட்டுக் கொண்டு கை கூப்பினாள் விசாலம்...

" சரி.. சரி.. ஜோதி.. இங்கே வா... உட்கார்... கண்ணை மூடு!... " - என்றான் அருண்...

" என்னப்பா.. வாங்கி வந்திருக்கே திருச்சியில இருந்து?... "

விசாலத்துக்கு ஆவல்...

" சாண்டக்ஸ் ஷூ கேட்டிருந்தேன்.. அதுவா இருக்கும்... " - என்றாள் ஜோதி...

" ஏன்?... தஞ்சாவூர்ல.. இல்லே...ன்னா!... "

" சும்மா சொல்லிக்கலாமில்லே.... திருச்சியில வாங்குனது..ன்னு!... "

" சரி.. சரி... கண்ணை மூடிக்கோ!... "

" ம்ம்!... " - கண்களை இறுக மூடிக்கொண்ட பாவனையுடன் எதிரில் அமர்ந்தாள் ஜோதி...

சரசர.. - என்ற சத்தத்துடன் பெட்டியைப் பிரித்தான் அருண்...

ஆவல் தாங்கமாட்டாமல் கண்களைத் திறந்த ஜோதி ஆனந்தக் கூச்சலிட்டாள்..

அருணின் கைகளில் புத்தம் புதிய டிரான்சிஸ்டர்...

சின்னச் சின்ன திருகுகள்.. பொன் வண்ணக் குமிழ்கள்... அலை வரிசையைக் காட்டுவதற்கு பச்சை நிற முள்...




ஒரு ஓரத்தில் அழகோடு அழகாக வாயில் விரலை வைத்துக் கொண்டிருக்கும் குழந்தையின் உருவம்...

அந்த ரேடியோவைக் கண்டு குழந்தையாகக் குதுகலித்துச் சிரித்தாள் ஜோதி...

அதைக் கண்ட விசாலத்துக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சிதான்..

ஆனாலும் சந்தேகம்... ரேடியோ எல்லாம் வாங்குற அளவுக்கு அருண்கிட்ட ஏது பணம்?... அந்த அளவுக்குப் பணம் எல்லாம் அனுப்பி வைக்க மாட்டாரே!..

மனதில் எழுந்த சந்தேகத்தை உடனடியாகக் கேட்டும் விட்டாள்...

" காலெஜ் கிரவுண்ட்... ல பொருட்காட்சி போட்டுருந்தாங்க..ம்மா... தலைக்கு அஞ்சு ரூபாய் டிக்கெட்... முதல் நாள் வர்றவங்களுக்கு அதிர்ஷ்ட குலுக்கல்..ன்னு சொல்லி அஞ்சு பேருக்கு முதல் பரிசு இந்த மாதிரி ரேடியோ.. அஞ்சு பேருக்கு அலாரம் டைம்பீஸ்.. பத்து பேருக்கு பிக்னிக் பேக்... "

" ஜனங்க முண்டியடிச்சுக்கிட்டு வந்தாங்க... நான் வாங்குன சீட்டுக்கு முதல் பரிசு ரேடியோ!.. "

அருண் சொல்லி முடித்தான்...

" என்னமோ நானும் சொல்லிக்கிட்டு தான் இருந்தேன்... வெள்ளிக்கிழமை அதுவுமா... வீட்டுக்கு ரேடியோ வந்துருக்கு!.. "

விளக்கு மாடத்தைப் பார்த்து கைகூப்பிக் கொண்டாள் விசாலம்...

சற்றைக்கெல்லாம் வீடு முழுதும் சாம்பிராணிப் புகை பரவி நிற்க வாசலில் சைக்கிள் சத்தம் கேட்டது...

" அப்பா... வந்துட்டாங்க... " - அருண் எழுந்தோடினான்...

வாசலில் அப்பாவுக்கும் மகனுக்கும் பேச்சு தொடர்ந்தது...

" நாகூர் பாசஞ்சர்..ல வந்தியா!... லெட்டர் போட்டிருக்கலாமில்லே!... "

" எதிர்பார்த்தது தான் லீவு ... ஆனா திடீர்..ன்னு சொல்லிட்டாங்க... "

அப்பாவின் சைக்கிள் கேரியரில் இருந்த அந்தப் பெட்டியைக் கண்ட அருணுக்கு சந்தோஷ அதிர்ச்சி...

" அப்பா... இது!... "

உதடுகளைக் குவித்து விரலை வைத்துக் காட்டிய குருசாமி...

" ஜாக்ரதையா பெட்டிய எடுத்துக்கிட்டு வா!... " - என்றார்...

" ஜோதீ!... ஜோதிக் கண்ணு!... " - செல்லமாக அழைத்துக் கொண்டு உள்ளே நுழைய

அப்பாவையும் அண்ணனையும் எதிர் கொண்ட ஜோதி மறுபடியும் கத்தினாள்...

" அம்மா... அம்மா!... இங்கே வாயேன்... இன்னொரு விருந்தாளி!... "

சமையற் கட்டிலிருந்து கூடத்துக்கு வந்த விசாலம் திகைத்து நின்றாள் - வீட்டுக்கு வந்திருக்கும் இன்னொரு ரேடியோவைக் கண்டு...

கூடத்தில் மெதுவாக சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டார் குருசாமி...

முழங்கால்களில் வலி... அது குளிர் காலத்தில் கொஞ்சம் அதிகம்...

அவர் அருகில் அமர்ந்து கால்களைத் தன் மடியில் வைத்துக் கொண்டு தைலத்தைத் தடவியபடி மெதுவாக அமுக்கி விட்டாள் ஜோதி...

அருண் கொண்டு வந்திருந்த ரேடியோவின் புராணம் விலாவாரியாகச் சொல்லப்பட்டது..

கேட்டுக் கொண்டிருந்த குருசாமி அமைதியாகச் சொன்னார் - " சரி.. சரி... ஒரு ரேடியோவை ஜோதிக்கு சீதனமாக் கொடுத்துடுவோம்!... "

" ஏற்கனவே அங்கே ஒன்னு இருக்கு!.. " என்றாள் விசாலம்...

"என்ன லே... சொல்லுறே!.. " - குருசாமிக்கு வியப்பு...

" இங்கேயும் ஒரு ரேடியோ பொட்டி சீதனமா வரப் போவுதில்லா!... "

" நீ சொல்றது எதுவும் எனக்கு வெளங்லையே!... "

" இதையெல்லாம் எடுத்துப் பாருங்க... நல்லாவே வெளங்கும்!... "

நாலைந்து பொங்கல் வாழ்த்து மடல்களை எடுத்து வந்து நீட்டினாள்...

வாழ்த்து மடல்களில் சிவகாசி லித்தோ வாசம் ஒட்டிக் கிடக்க அதையும் மீறியதாக அன்பின் நறுமணம் விரவியிருந்தது

வண்ண மயமான வாழ்த்து மடல்கள்.. ஒவ்வொன்றும் ஒரு விதம்..

சுட்டும் விழிச்சுடரே ஜோதி!.. கண் விழிக்குள் கார்த்தி!...

அன்பின் வடிவே அருண்!.. நெஞ்சமெல்லாம் நீலா!... - என்றெல்லாம் காவியங்கள்...

" இதே மாதிரி இங்கேயிருந்தும் அங்கே ஆறேழு பறந்துருக்கு!... பசங்க ரெண்டு பேரும் ஒருத்தனுக்கொருத்தன் மச்சான்... மச்சான்...னு பேசிக்குவானுங்க... சந்தேகப்பட்டேன்... சரியாயிடுச்சு! "

- என்றபடி மகனையும் மகளையும் பார்த்தாள் விசாலம்...

**அருணின் முகத்தில் கலவரம்...**

**ஆனாலும் -**

**கால்களை அழுத்தி விட்டுக் கொண்டிருந்த -  மகளின் கூந்தலை வருடியவாறு புன்னகைத்தார் குருசாமி..**

**அகன்ற நெற்றியில் சில சுருக்கங்கள் தோன்றி மறைந்தன...**

**" அவரு ரொம்பவும் நல்ல மனுசன்.. முனுசிபாலிட்டி ஆபீசர்... .  ரெண்டு மூணு தடவை கடைக்கு செக்கிங்... அது... இது... ன்னு வந்திருக்காரு... இப்படி இருக்கறப்போ... இது வேறயா!... "**

**" பஜார்...ல மத்த கடைக்காரங்க ஒரு மாதிரியா பேசுவாங்களே!...
அது கெடக்குது!.. அவுங்க பேசுனா பேசிட்டுப் போவட்டும்!..  நாம நம்ம சோலியப் பார்ப்போம்... தை பொறந்ததும் போய்ப் பேசுவோம்!...
என்னடா செல்லம்!.."**

**குருசாமியின் வார்த்தைகளில் கனிவும் பாசமும் ததும்பியிருந்தன... ...**

**தகப்பனின் முழங்காலில் முகம் பதித்துக் கொண்டாள் ஜோதி...**

**============================**

**Geetha Sambasivam :**

**ஆமாம், இல்ல? அப்போதெல்லாம் ரேடியோவுக்கு உரிமம், சைகிளுக்கு உரிமம் என்றிருந்தது. பின்னால் அதை நீக்கினார்கள். இருந்தாலும் எங்க வீட்டில் பெரிய ரேடியோவும் இருந்ததில்லை. அறுபதுகளில் அண்ணா வேலைக்குப் போனதும் வாங்கிய முதல் டிரான்சிஸ்டர் ரேடியோவை ஹோசூருக்குப் போயிருக்கும்போது பாட்டுப் போட்டுக் கேட்டுக் கொண்டு இருப்பேன். பின்னால் அண்ணா அதை என்னை எடுத்துப்போகும்படி சொல்லி இருந்தார். அதற்கான பாட்டரி என் மாமா போட்டுத் தருவார். பாட்டரி மாற்றும்போதெல்லாம் டிவிஎஸ் நகருக்கு மாமா வீட்டுக்கு ரயில்வே லைன் ஓரமாக நடந்தே போவேன். மாமா மத்தியானம் சாப்பிட வரும்போது காத்திருந்து பாட்டரி போட்டுக் கொண்டு திரும்பும்போது மாமா பஸ்ஸுக்குக் காசு கொடுத்து அனுப்புவார்.**

**நெல்லைத்தமிழன்:**

**நல்ல கதை.**

**வீடுகளைப் பற்றிய வர்ணனை, கோலம், இயல்பான உரையாடல்கள், அன்பு த்தும்பும் குடும்பங்கள், விவசாயியை மதிக்கும் பாங்கு.... என்ற பழைமையான விஷயங்களே கதையை ரசிக்க வைக்கிறது. துரை செல்வராஜு சாரின் கைவண்ணம் அருமை.**


**எனக்கு என்ன சந்தேகம்னா, பொதுவா பொண்ணு கொடுத்து பொண்ணு எடுப்பதற்கு யோசிப்பாங்க. யாரேனும் ஒருவரிடத்தில் சிக்கல் இருந்தால்தான் இது நடக்கும்.**

**இருந்தாலும் சிக்கலில்லாத கதைக்குப் பாராட்டுகள்.**

**Bhanumathy Venkateswaran :**

**கிராமத்து வீட்டின் வர்ணனையை படித்த பொழுது கிராமத்தில் இருக்கும் எங்கள் வீட்டிற்கு சென்று விட்ட உணர்வு.  வழக்கம்போல் சுபமான முடிவு. இனிமையான கதை. நன்றியும் பாராட்டுகளும். //ஜடைகள் இரண்டும் அப்படியும் இப்படியுமாக ஆடின..// ஆஹா! என்ன ரசனை! நிறைய ரசித்திருக்கிறாரோ? ஹாஹா! படம் போட்டவருக்கு ரெட்டை ஜடை பெண் படம் கிடைக்கவில்லையோ?**

==============================================




==================================================

## புதன் கேள்வி பதில்

**நெல்லைத் தமிழன்:**

**1. ஆடிப்பெருக்கு அன்று கலந்த சாதங்கள் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரையில் ஊருடன் சாப்பிட்டுருக்கீங்களா?**

# ஆறு அழுக்கு சாக்கடையாகாத 194 ★ களில் அந்த அனுபவம் ஆண்டுதோறும் இருக்கும்.
கடலூரில் ஆற்றுத்திருவிழா என்று விமரிசையான கொண்டாட்டம், சுவாமி புறப்பாடு எல்லாம் உண்டு.

$ நிறையவே. ஆறும் ஊரும் வேறு வேறாய் இருந்தாலும், நண்பர்களுடன் நன்கு பொழு போயிற்று.

& கலவை சாதங்கள் செய்து, கருவடாம் பொறித்து அம்மா கொடுக்க, அவற்றை எடுத்துக்கொண்டு பல குடித்தனங்கள் குடியிருந்த வீட்டின் மொட்டை

மாடிக்குச் சென்று, வீட்டில் குடியிருந்த எல்லோரும் அவரவர் வீட்டுத் தயாரிப்புகளை மற்றவர்களுடன் பகிர்ந்து, மகிழ்ந்திருந்த நாட்கள் நன்கு நினைவில் உள்ளன.

**2. நீங்க தலைக்காவிரி சென்று காவிரி உற்பத்தி ஸ்தானம் பார்த்திருக்கீங்களா? (காவிரி பாயும் தஞ்சைக்காரங்க என்பதால் இந்தக் கேள்வி)**

# இன்னும் இல்லை. ஆசை இருக்கு அதிர்ஷ்டம் இருக்குமா தெரியவில்லை.

$ போயிருக்கிறோமே!

& இன்னும் இல்லை.

**3. 60 வயது என்பது ஓய்வு பெறும் வயது. ஓய்வு காலத்தில் எதுக்கு முக்கியத்துவம் தரணும்? எப்படி?**

# எது பற்றியும் நொந்து போகாத மனமும், யாரையும் நோகடிக்காத இயல்பும் கொண்டவராக இருப்பதற்கு முக்கியத்துவம் தர வேண்டும். இதற்கான பொறுமையும் கருணையும் வளர்த்துக் கொள்ளப் பட வேண்டும்.
ரொம்பவும் loaded questions நமக்கு நாமே கேட்டுக் கொள்ளப் பட வேண்டியவை. (பிறர் அபிப்பிராயங்கள் காதறுந்த ஊசிதான்.)

$ 60-இல் அரசாங்க வேலை செய்தவருக்கு தான் அந்த பாக்கியம்.
அடுத்தவர் உதவி தேவையின்றி வாழ வேண்டும் என்றால், ஆரோக்கியம் அவசியம் பேண வேண்டும், வீட்டில் தேவைப்படும் எந்த வேலையும் செய்யலாம்.

& நான் ஐம்பத்துநான்கு வயதிலேயே விருப்ப ஓய்வு வாங்கிக்கொண்டு சந்தோஷமாக பொழுதைக் கழித்துக்கொண்டுள்ளேன். வேலைக்கு சென்ற காலத்தில் புத்தகங்கள் படிக்க நேரம் இல்லையே, ஓய்வு பெற்றவுடன் படிக்கவேண்டும் என்று நினைத்திருந்தேன். பார்த்தால், இப்போவும் புத்தகங்கள் படிக்க நேரம் இல்லை! எதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று கேட்டால், எது சந்தோஷமோ அதை செய்துகொண்டு, மற்றவர்களுக்கு நம்மால் ஆன உதவிகளைச் செய்துகொண்டிருந்தால், அது போதும்.

==================================

& சொல்கிறார் : சென்ற வார பதில் ஒன்றில், ஒரு முழு பொய் சொல்லியிருந்தேன். அதை யாரும் கண்டுபிடிக்கவில்லை! (*"நான் படித்தது Ribardo Bansi எழுதிய Pulao in Persia என்ற புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. )*ஹி ஹி! யாரும் இதை கண்டுகொள்ளவில்லை.

அதற்கு முன்பாக, ஒரு புத்தகம் என்னிடம் இருக்கு, வேண்டும் என்பவர்களுக்கு அனுப்புகிறேன் என்ற <u>உண்மையையும்</u> சொல்லியிருந்தேன். அதையும் யாரும் கண்டுகொள்ளவில்லை!

====================================

<u>கோமதி அரசு</u> :

அனைவருக்கும் வணக்கம் வாழ்க வளமுடன்
கேள்களும் பதிகளும் அருமை.

மின்நிலாவிற்கு வாழ்த்துக்கள்.

ஆடிபெருக்கு சமயம் கடற்கரை சென்று இருக்கிறோம். கலவை சாதங்கள் எடுத்துக் கொண்டு, பிச்சாவரம் சென்று இருக்கிறோம். அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன்.

எங்களுடன் அனுப்பி வைப்பார்கள் குழந்தைகளை அவர்கள் இப்போதும் அதை நினைவுகூர்ந்து போனில் பேசுவார்கள்.

//எது பற்றியும் நொந்து போகாத மனமும், யாரையும் நோகடிக்காத இயல்பும் கொண்டவராக இருப்பதற்கு முக்கியத்துவம் தர வேண்டும். இதற்கான பொறுமையும் கருணையும் வளர்த்துக் கொள்ளப் பட வேண்டும்.//

நன்றாக சொன்னீர்கள்.

கமலா ஹரிஹரன் :

Kamala Hariharan 27 மே, 2020 'அன்று' பிற்பகல் 7:05

வணக்கம் சகோதரரே

இன்றைய கேள்வி பதில்கள் எப்போதும் போல் அருமை.

பதினெட்டாம் பெருக்கு வீட்டில்தான் பெரும்பாலும். சித்ரான்னங்கள் அனைத்தும் வருடந்தோறும் உண்டு.

/எது பற்றியும் நொந்து போகாத மனமும், யாரையும் நோகடிக்காத இயல்பும் கொண்டவராக இருப்பதற்கு முக்கியத்துவம் தர வேண்டும். இதற்கான பொறுமையும் கருணையும் வளர்த்துக் கொள்ளப் பட வேண்டும்/

உண்மை. 60க்கு மேல் இந்தப் பக்குவம் இயல்பாக வர இறைவனிடம் மனமாற பிரார்த்தனை செய்திடல் வேண்டும். மற்றவர்களிடம் இது பற்றி கலந்து பேசினால் கூட பக்குவங்களுக்கு கண்டிப்பாக பங்கம் வந்து விடும்

மின் நிலா என்றும் பொலிவுடன் திகழ நிலாவுக்கு வாழ்த்துகள். பகிர்வுக்கு மிக்க நன்றி.

நன்றியுடன்
கமலா ஹரிஹரன்.

==============================================

## உண்மையான கனவு - போலிக்கனவு - கனவின் காலம்

வியாசர் கனவுகளுக்கு பலன் எழுதி இருக்கிறாராம். அதைப் படித்ததும் பகிரலாம் என்று தோன்றியது. ....

சென்ற வாரம் புது வீட்டில் பழைய புத்தகங்களுக்கு நடுவே கண்டெடுத்த புத்தகம் பற்றிச் சொன்னேன். அதில் அதன் ஆசிரியர் எழுதி இருக்கும் முன்னுரை, அறிமுகத்தை இங்கு தருகிறேன்.

இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் கனவுகளின் காலம் பொறுத்து அது பலிக்கும் காலம் பற்றி அவர் சொல்லி இருப்பது.

இதன் பகுதிகளை அப்புறம் அவ்வப்போது கொஞ்சம்
கொஞ்சம் வெளியிடுவதாகச் சொல்லி இருந்தேன். ஆனால் ஒரு சோகம், புத்தகத்தை மறுபடி தேடவேண்டும்! ஏகப்பட்ட அமர்க்களங்களில் புத்தகத்தை எங்கே வைத்தேன் என்று நினைவில்லை!

சரி, இப்போது ஏற்கெனவே எழுதி வைத்த புத்தகத்தின் பக்கங்களுக்குச் செல்வோம்!

*முன்னுரை :- இரவில் நாம் தூங்கும்போது கனவு காண்பது ஏன்? கனவில் காணும் சம்பவங்கள் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதன் காரணம் என்ன? இக்கேள்விகளுக்கு சரியான விடை இதுவரை யாரும் கொடுத்ததில்லை(1963) மேல்நாட்டார் இவ்விஷயத்தை விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவர்கள் ஒருக்கால் இவ்விஷயங்களை சரியான காரணங்களைக் கண்டு பிடிக்கக் கூடும்.*

*நமது பாரத நாட்டில் முனிவர் வியாசர் தனது ஞான சக்தியால் இந்த அர்த்தமில்லாத கனவுகளுக்கு பொருள் எழுதி உள்ளார். அவைகள் எல்லாம் வடமொழியில் சுவடிகளில் எழுதப்பட்டுள்ளன. நான் என் உத்தியோக விஷயமாக அலகாபாத்தில் 1944 - 46 ஆம் ஆண்டுகளில் இருக்க நேரிட்டது. அச் சமயம் இச் சுவடிகளை ஒரு பண்டிதரின் உதவியால் தமிழில் மொழிபெயர்த்து இந்நூலை எழுதலானேன். கனவில் நம்பிக்கை உள்ள வாசகர்கள் அன்புடன் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.*

*எம் கே சபாபதி B.A.A.S.,*
*(Retired Dy -controller of Mily, Accts, Burmaa)*

-------------------------

*இவ்வுலகில் கனவு காணாமலிருப்பவர்கள் ஒருவருமில்லை என்றே சொல்லலாம். அப்படி சிலர் இருப்பதாக சிலர் நினைத்தாலும் அவர்கள் காணும் கனவுகள் அவர்களுக்கு முழுதுமாகவோ, அரைகுறையாகவோ நினைவிலிருந்து மறைந்து விடுகின்றன.*

*<u>உண்மையான கனவுகள் :</u>*

*நாம் உறங்கும்போது நம் ஸ்தூல சரீரம் உணர்வற்றுக் கிடக்கிறது. கண்கள் மூடப்பட்டிருக்கின்றன. காதுகள் திறந்திருந்தாலும் சப்தத்தைக் கேட்பதில்லை. ஆகையால் நாம் கனவு காணும்போது தொழிற்படுவது நம் ஸ்தூல சரீரமல்ல, அதற்குள்ளிருக்கும் சூக்ஷ்ம சரீரம்தான்.*

*இதை ஆவி உடலென்றும் சொல்வதுண்டு. இந்த சூக்ஷ்ம சரீரம் நம் கண்ணுக்குத் தெரியாது. இந்த ஆவி உடலுக்கு அபார சக்தி உண்டென்றும், நாம் உறங்கும்போது எங்கு வேண்டுமானாலும் செல்லக்கூடியது என்றும், இதற்கு ஆவி உலகிலிருக்கும் இறந்துபோன நம் சுற்றத்தாருக்கும், நண்பர்களுக்கும் தொடர்பு உண்டென்றும், அவர்களுடன் கண்டு பேசுவதே நமக்கு கனவாகத் தோன்றுகிறது என்றும் அறிஞர்கள் எழுதியும், கூறியும் இருக்கிறார்கள்.*

*இறந்துபோன நம் சுற்றத்தாருடைய ஆவி உடல், ஆவி உலகத்திற்குப் போனபிறகும் நம்மை மறப்பதில்லை என்றும், நம் நன்மையைக் கோரி அவர்கள் நம் கனவில் தோன்றி, நமக்குத் பின்னால் நடக்கப்போகிற காரியங்களை எச்சரிக்கத் தயாராயிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆகையால் இறந்துபோன நம் சுற்றத்தார்களையும் நண்பர்களையும் நாம் நினைத்தும், தொழுதும் வந்தால்தான் அவர்கள் நம் கனவில் வந்து நமக்கு வரும் நன்மைகளையும் தீமைகளையும் பற்றி எச்சரிப்பார்கள்.*

*இப்படி அவர்கள் நம் கனவில் வந்து எச்சரிப்பதுதான் உண்மையான கனவாகும். சில கனவுகள் மகிழ்ச்சியைத்தரும். சில கனவுகள் மனக்கவலையைக் கொடுக்கும். பயங்கரமான கனவுகளையும்,*

*மனக் கவலைகளைக் கொடுக்கும் கனவுகளையும் காணும்பொழுது உடனே எழுந்து ஆண்டவனைத் தொழுதால் சாந்தி உண்டாகக் கூடும்..*

*<u>கனவு காணும் காலம் :-</u>*

*முதல் ஜாமத்தில் காணும் கனவுகள் ஒரு வருடத்துக்குள்ளும், இரண்டாவது ஜாமத்தில் காணும் கனவுகள் எட்டு மாதத்திற்குள்ளும்   மூன்றாவது ஜாமத்தில் காணும் கனவுகள் நான்கு மாதத்திற்குள்ளும் அதிகாலையில் காணும் கனவுகள் உடனேயும் பலிக்கும் என்றும் அறிஞர்கள் எழுதி இருக்கிறார்கள்.*

*<u>போலி கனவுகள் :-</u>*

*சிலர் அதிகமாக சாப்பிடுவதால் அஜீரணம் காரணமாக பயங்கரமான கனவுகளைக் காணலாம்.  சிலர் வறுமையால் கஷ்டப்படும்பொழுது மனம் மிகவும் சிந்தனையில் ஈடுபட்டிருக்கலாம்.  இச் சிந்தனைகள் தூங்கும்பொழுது கனவுகளாக வரக்கூடும்.  இன்னும் சிலர் விழித்திருக்கும்பொழுது மனக்கோட்டைக் கட்டிக் கொண்டிருப்பார்கள்.  இவைகளும் நாம் தூங்கும்போது கனவில் தோன்றலாம்.*

*<u>அர்த்தமில்லாத கனவுகள் :-</u>*

*உண்மையான கனவுகள் சிலருக்குத்தான் தோன்றும்.  அநேகமாய், காணும் கனவுகள் கனவு காண்பவருக்கும், கனவில் வரும் உருவங்களும் (ஆண்களும், பெண்களும், மிருகங்களும், பூச்சிகளும், பறவைகளும், பொருள்களும்) ஒருவித சம்பந்தமும் இல்லாமலிருக்கும்.  இவ் விதமான கனவுகளுக்கு நம் பகுத்தறிவைக் கொண்டு பலன் சொல்ல முடியாது.  ஆனால் இக்கனவுகளுக்கு முனிவர் வியாசர் தனது ஞான சக்தியால் பொருள் எழுதியுள்ளார். அவைகளை எடுத்து அகர வரிசைப்படுத்தி இங்கே எழுதியுள்ளேன்.*

*அவ்ளோதாங்க!*

================================================================================

*போன வாரம் சரோஜ் நாராயணஸ்வாமி பற்றி பகிர்ந்திருந்தேனா?
இந்த வாரம் பாடகி வாணி ஜெயராம்.*

*இது மார்ச் 21 ம் தேதியிட்ட தினமலரில் வெளியானது.*



*கடந்த, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, பல மொழிகளில், ஏராளமான பாடல்களை பாடி வரும் வாணி ஜெயராம்:*

*"நான் பிறந்தது வேலூார். நான்காம் வகுப்பு வரை, அங்கு தான் படித்தேன். அதன் பின், சென்னை வந்து விட்டோம். ஐந்தாம் வகுப்பிலிருந்து, மயிலாப்பூர், லேடி சிவசாமி அய்யர் பள்ளியில் தான் படித்தேன்.*

*வேலூாரில் இருக்கும் போது, நானும், என் சகோதரிகளும், கடலூார் ஸ்ரீனிவாச அய்யங்காரிடம், கர்நாடக இசையை கற்றோம். சென்னை வந்ததும், இசைப் பயிற்சி தொடர்ந்தது. பள்ளியில் படிக்கும் போது, இசைப் போட்டிகளில் பல பரிசுகளை வென்றுள்ளேன். அதுபோல, கையெழுத்து போட்டி, பேச்சு போட்டி என, பிற போட்டிகளிலும் வெற்றி வாகை சூடிஉள்ளேன்.*

*கல்லூாரி படிப்பு முடிந்ததும், வங்கி ஒன்றில் வேலை கிடைத்தது. 1968ல் எனக்கும், ஜெயராமுக்கும் திருமணம் நடந்தது. அவர் அப்போது, மும்பையில் உயர் பதவியில் இருந்தார். அதனால், வங்கிப் பணியை, மும்பைக்கு மாற்றிக் கொண்டேன்.*

*என் குரல் வளத்தை அறிந்த அவர், ஹிந்துஸ்தானி இசையை அறிய, உஸ்தாத் அப்துல் ரகுமான் சாஹேப் இடம் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார். அவர் தான், முழு மூச்சாக இசைத் துறையில் இறங்க, அறிவுரை வழங்கினார். அதன்படி, வங்கிப் பணியை ராஜினாமா செய்து விட்டு, காலையிலிருந்து மாலை வரை, இசை பயின்றேன்.*

*நான், 1970ல் தான், முதலில் சினிமாவில் பாடினேன். ஹிந்திப் படம் ஒன்றில் நான் பாடிய பாடல் பதிவு செய்யப்பட்டது. அதன் பின், ஒரு நாள், சென்னை மியூசிக் அகாடமியில், என் இசை நிகழ்ச்சி நடந்தது. என் குரலை கேட்டவர்கள், 'நம் தமிழ் பொண்ணு, ஹிந்தியில் சிறப்பாக பாடுகிறார்; அவருக்கு தமிழில் வாய்ப்பு கிடைக்கவில்லையே' என, ஆதங்கப் பட்டனர்.*

*அதன் பின், எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில், 'மல்லிகை என் மன்னன் மயங்கும்' பாடலை பாடினேன். ஹிந்தி மட்டுமின்றி, மராத்தி, குஜராத்தி, போஜ்பூரி, மார்வாரி, பெங்காலி, ஒடியா, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என, 19 மொழிகளில், பல ஆயிரம் பாடல்களை பாடியுள்ளேன். ஒரிசா மாநிலத்தின் ஒடியா மொழியில், 11 ஆண்டுகள், நம்பர் - 1 பாடகியாக இருந்திருக்கிறேன்.*

*ஏராளமான விருதுகள், தேசிய விருதுகள், பட்டங்களை வாங்கிக் குவித்து உள்ளேன். தமிழில், எம்.எஸ்.வி., துவங்கி, கே.வி.மகாதேவன், இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் என, பிரபல இசையமைப்பாளர்களின் பாடல்களுக்கு பாடிஉள்ளேன்.பெரிய சாதனை செய்து விட்டதாக என்றுமே நான் நினைத்தது கிடையாது. ஒவ்வொரு நாளும் நமக்கு கிடைக்கும் அனுபவங்கள் தான் நமக்கு குரு. அவ்வப்போது, ஏழைகளுக்கு சின்னச் சின்ன உதவிகள் செய்து வருகிறேன். அது, மனநிறைவை அளிக்கிறது!*

==========================================================================

*2014 இல் சென்னை, பெரம்பூரில் நடந்த ஒரு சுவாரஸ்யமான சம்பவம் பற்றி... படிப்பவர்களுக்குதான் சுவாரஸ்யம்! அனுபவித்த அந்தப் பெண்ணுக்கு உயிர்ப் போராட்டம்! ஆனால் அந்நிலைக்கு அவளின் பொறுப்பின்மையே காரணம்.*

Sriram Balasubramaniam
March 21, 2014 at 3:31 PM ·

ஆயுசு கெட்டி :

மின்சார ரயிலில் இருந்து தப்பிக்க தண்டவாளத்தில் படுத்து உயிர் பிழைத்த இளம்பெண்


பெரம்பூர்: செல்போனில் பாட்டு கேட்டபடி இளம்பெண் ஒருவர் தண்டவாளத்தை கடந்து செல்ல முயன்ற போது மின்சார ரயில் வந்ததால், தண்டவாளத்தில் படுத்து அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார். பெரம்பூரில் இன்று காலை நடந்த இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அம்பத்தூர் புதூரை சேர்ந்தவர் மோகன் குமார். இவரது மகள் சகானா தேவி (25). பெரம்பூரில் உள்ள தனியார் கம்பெனியில் டிசைனராக வேலை பார்த்து வருகிறார். இன்று காலை 8.30 மணியளவில் வழக்கம் போல வேலைக்கு மின்சார ரயிலில் பெரம்பூருக்கு வந்தார். 4வது பிளாட்பாரத்தில் இறங்கி தண்டவாளத்தை கடக்க நடந்து சென்றார்.

அப்போது காதில் செல்போனில் பாட்டு கேட்டபடியே சென்றார்.அந்த நேரத்தில் சென்ட்ரலில் இருந்து ஆவடிக்கு மின்சார ரயில் அதிவேகமாக வந்தது. பாட்டு கேட்டபடியே சென்றதால் ரயில் வரும் சத்தம் அவருக்கு கேட்கவில்லை. பிளாட்பாரத்தில் இருந்த பொது மக்கள், ரயில் வருவதையும் அந்த தண்டவாளத்தில் இளம்பெண் நடந்து செல்வதையும் பார்த்து கூச்சல் போட்டனர். ஆனால், அவர்கள் சத்தம் போட்டது அவரது காதில் விழவில்லை. சகானா சுவாரசியமாக பாட்டு கேட்டபடி சென்று கொண்டிருந்தார். எதேச்சையாக சகானா தேவி திரும்பி பார்த்த போது மின்சார ரயில் மிகமிக அருகில் வேகமாக வருவதை பார்த்து அதிர்ச்சி அடைந்து அலறினார்.

==========================================================================

*ஐந்து வருடங்களுக்கு முன்னர் பேஸ்புக்கில் எழுதிய ஒரு குட்டிக்கவிதை.*
*இப்போது கொரோனா வடிவில் இதற்கு வந்த பேராபத்து....*

*ம்ம்ம்...*




==========================================================================

*ஐந்து வருடங்களுக்கு முன் பகிர்ந்ததுதான் கீழே இருப்பதுவும்! பெற்றோர்களின் பாசத்தைக் கண்டு 'மெய்சிலிர்த்தது'!*

*இதற்கு "வெளங்கிடும்" என்று கமெண்ட் போடுவதைத் தவிர்க்கவும்!!!*




==========================================================================================

*ரொம்ப நாட்களாய் பகிர நினைத்து மறந்து கொண்டே போகிறது ; விட்டுப்போகிறது!*

*புது வீட்டுக்கு வந்த புதிதில் பொருள்களை தவணை முறையில் அடுக்கிக் கொண்டிருந்தோம். (இன்னும் தவணை முடியவில்லை!)*

*அப்போது ஹாலில் இருந்து ரூமுக்குள் பார்த்தபோது கிடைத்த காட்சி.*


*காலை வெயிலில் நிழல் போல அமைந்து காணக் கிடைத்தது. அது உண்மையில் என்னவோ, எதுவோ தெரியாது. ஆனால் பார்ப்பதற்கு ராமர் போல, வசிஷ்டர் போல, ஆஞ்சநேயர் போல, ஒவ்வொரு சாயலில் தோன்றியது!*

*அதுவும் ஆடும் நிழலில் ஏதோ 'அவர்' அசைந்து கொண்டே இருப்பது போலவும் தோன்றியது! தலையை அங்கும் இங்கும் திருப்பிப் பார்ப்பது போல....!*

*அப்போது ~~பிடித்த~~ எடுத்த புகைப்படங்களைக் கீழே தருகிறேன்! கோபுரம் போல தோற்றம் தரும் வெள்ளைப் பின்னணியின் உள்ளே தெரியும் ஜடாமுடி நிழலை கவனியுங்கள்!*




NAKODA



===================================================

KILLERGEE Devakottai :

வாணிஜெயராம் அவர்களின் குரல் எனக்கு மிகவும் பிடித்தமானது.
தமிழச்சியாய் பிறந்து இவ்வளவு இந்திய மொழிகளில் பாடியிருப்பது பெருமையான விசயம்.

இந்த வளர்ச்சிக்கு அவரது கணவரே காரணம்.

தமிழில் பாடியது குறைவான பாடல்களே காரணம் தமிழச்சி என்பதே...

***

வல்லிசிம்ஹன்

அன்பு ஸ்ரீராம், இனிய காலை வணக்கம்.
வியாச பகவான் , கனவுகள் பற்றி எழுதி இருக்கிறாரா.

**என்ன ஒரு அதிசயம்.!**
**நானும் இந்தப் பலங்களைப் பற்றிப் படித்திருக்கிறேன்.**

**உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்து**
**விட்டுப் போனது.**

**பித்ருக்களை நாம் எத்தனைக் கெத்தனை நினைக்கிறோமோ**
**அத்தனைக்கத்தனை சந்ததிகளுக்கு நன்மை.**

***

**நெல்லைத் தமிழன் :**

**அபூர்வ சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற நேரங்களில் நம் ஆண்டு காலத்துக்கு 300-400 வருடங்கள் உயிர், அடுத்த பிறப்பிற்காகக் காத்திருக்கும் என்று படித்திருக்கிறேன் (ஆவிகள் உலகம்)**

**விஜய் தொலைக்காட்சியில் பல வருடங்களுக்கு முன்பு, ஆழ்நிலை தூக்கத்திற்குக் கொண்டுபோய் ஒருவரின் முந்தைய பிறப்புகளை அறியும் தொடர் வந்தது. அதில் ஒரு நடிகை (பெயர் மறந்துவிட்டது முகம் மனதில் நிழலாடுகிறது) முந்தைய ஜென்மத்தில் தான் 'தாழ்ந்த' தொழில் செய்பவராக இருந்தார் என்று சொன்னார். (ஆழ்நிலைத் தூக்கத்தில்). சிலர் 'பறவைகளாக' இருந்ததையும் சொல்லியிருந்தனர். அதில் ஒருவர், தான் முந்தைய ஜென்மத்தில் ஜோதாபாய் அக்பர் என்றெல்லாம் சொல்லியிருந்தார். அவரை அந்த இடங்களுக்கே அழைத்துச் சென்று அதையும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினார்கள்.**

***

# வெள்ளி வீடியோ : தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்பாட்டாள்..

**நேயர் விருப்பப் பாடல். கேட்டிருப்பவர் பானு அக்கா.**

**பார்த்திபன் கனவு 2003 இல் வந்த படம். பார்த்திபன், சினேகா நடித்த திரைப்படம். சினேகா முதன்முதலில் இரட்டை வேடத்தில் நடித்த திரைப்படம். அப்புறம் அவர் எத்தனை படங்களில் இரட்டை வேடங்களில் நடித்தார் என்று கேட்கக்கூடாது!**




கரு பழனியப்பன் இயக்கம். வித்யாசாகர் இசை.

பல விருதுகளை அந்த ஆண்டு வாங்கிக்குவித்த இந்தப் படத்திலிருந்து ஏதாவது ஒன்று என்று இரண்டு பாடல்களைக் கேட்டிருக்கிறார் பானு அக்கா. ஒன்று பக் பக் பக் பக் மாடப்புறா, இன்னொன்று இன்று பகிரப்படும் 'ஆலங்குயில் கூவும் ரயில்...'



முதல் பாடலை பழைய பாணியில் அமைத்திருக்கிறார்கள். காட்சி கானம் இரண்டுமே அப்படிதான்.




நாம் பகிரப்போகும் பாடல் பாடலாசிரியருக்கான விருதை, அந்தப் பாடலை எழுதிய கபிலனுக்குப் பெற்றுத்தந்தது. சிறந்த பாடகிக்கான விருதை ஹரிணிக்குப் பெற்றுத்தந்தது. அந்த வருடத்தின் சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், நடிகை, இயக்குனர் என்று விருதுகளை வாங்கிக்குவித்த படம்.

ஆலங்குயில் கூவும் ரயில்
ஆரிராரோ ஏலேலேலோ
யாவும் இசை ஆகுமடா கண்ணா }
நான் பாடிட அரங்கேறிடும்
காதல் இசை கண்ணா

ஆண் : ஆன் செல்போன்
பெண் : இசைக்குயில் நம்மை அழைத்திடும் போது
தொலைவினில் வாழ்ந்தாலும் தொடுவோம் நாமே

ஆண் : ஹ்ம்ம் ம்ம் ம்ம் சிகரெட்

விரல்களின் இடையே புது விரல் போல
சில நொடி வாழ்கின்ற ஆறாம் விரல்

ஆண் : ஓகே ஹா ஆன் வெட்கம்

பெண் : இது பெண்மை பேசிடும்
முதல் ஆசை வார்த்தைதான்

ஆண் : மீசை

பெண் : இது எனக்கு மட்டும் சொந்தமாகும்
கூந்தல் குழந்தைதான் ஆலாபனை
நான் பாடிட அரங்கேறிடும்
காதல் இசை கண்ணா .

ஆண் : திருக்குறள்

பெண் : இரு வரி கவிதை ஒரு பொருள் தருமே
இருவரும் இது போல இருந்தால் சுகம்

ஆண் : நிலா

பெண் : இரவினில் குளிக்கும் தேவதை

இவளோ வளர்ந்தே தேய்கின்ற
வெள்ளை நிழல்

ஆண் : சரி கண்ணாடி

பெண் : இதில் என்னை பார்க்கிறேன்
அது உன்னை காட்டுதே ஆண் :

ம்ம் ஹ்ம்ம் காதல்
பெண் : க ரி நி ச ரி க ரி க ரி க ம்ம் ம்ம் ம்ம்

ஆண் : ம்ம்

பெண் : நம் நான்கு கண்ணில் தோன்றுகின்ற
ஒற்றை கனவு தான்


ஆண் : வாவ் பியூட்டிஃபுல்

பெண் : ஆலாபணை நான் பாடிட
அரங்கேறிடும் காதல் இசை கண்ணா
ஆலங்குயில் கூவும் ரயில்
ஆரிராரோ ஏலேலேலோ யாவும் இசை
ஆகுமடா கண்ணா
==========================================

இன்றைய என் விருப்பப் பாடல்...

படம் கண்ணன் ஒரு கைக்குழந்தை. இந்தப் படத்திலிருந்து ஒரு சிறப்பான பாடலை முன்னரே பகிர்ந்திருக்கிறேன் என்று நினைவு. அது "மேகமே தூதாக வா... அழகின் ஆராதனை.." பாடல். சிறப்பான பஹாடி ராகப் பாடல் அது.

இன்று பகிரப்போவது வேறொரு பாடல். இந்தப் படத்தின் எல்லாப் பாடல்களுமே நன்றாய் இருக்கும். பி சுசீலாவின் மோக சங்கீதம் உட்பட.



**1978 இல் வெளிவந்த இந்தத் திரைப்படத்தின் இயக்கம் வெங்கடேஷ். சிவகுமார், சத்யராஜ், சுமித்ரா நடித்திருக்கிறார்கள். சத்யராஜுக்கு இது இரண்டாவது தமிழ்ப்படமாம். இவரின் உண்மையான எஸ் என் ரெங்கராஜ் என்கிற பெயரில் தயாரிப்பு நிர்வாகியாகவும் இந்தப் படத்துக்கே இருந்திருக்கிறார்!**




**இன்று பகிரப்படும் பாடலின் ஆசிரியர் பாரதிதாசன்.**

**பாடும் குரல்?**

**ஹிஹிஹி.... வேறு யார்? SPB தான்.**

**இது எந்த ராகத்தில் அமைந்தது என்று சந்தேகமே இருக்காது!**

***காலை இளம் பரிதியிலே***
***அவளைக் கண்டேன்...***
***கடற்பரப்பின் ஒளிப்புனலில்***
***கண்டேன்..***
***அந்தச் சோலையிலே மலர்களிலே***
***தளிர்கள் தன்னில்***
***தொட்ட இடமெல்லாம்***
***கண்ணில் தட்டுப்பட்டாள்..***

==========================================

ஏகாந்தன் ! :

பாட்டுக்கிடையே வசனங்கள். செல்ஃபோன், சிகரெட்டோடு.. திருக்குறள்? ஏன், திரிகடுகம் ஞாபகம் வரவில்லையாமா பாட்டெழுதிய ஆளுக்கு?

ஒன்றுமில்லாத ஒன்றை, தன் திறமையினால் ஒரு பாட்டுப்போலக் கேட்கப் பாடுபட்டிருக்கிறார் வித்யாசகர்.

***

கீதா ரெங்கன் :

ஆஹா மிகவும் பிடித்த பாடல் ஸ்ரீராம். முதல் பாடல். பானுக்கா சாய்ஸா!!!

காபி ராகம்...நல்லா போட்டிருக்கிறார் வித்தியாசாகர். அவரும் பல நல்ல பாடல்கள் கொடுத்திருக்கிறார்.

படமும் பார்த்திருக்கிறேன்.

இரண்டாவது படம் பார்த்ததில்லை. பாடலும் இப்போதுதான் முதல் முறையாகக் கேட்கிறேன். சின்ன பாடல் நல்லாருக்கு.

இதன் ராகம் எனக்கு டவுட்டு இருக்கு. பௌளி, பூபாளம், ரேவகுப்தி மூன்றும் ஒரே போல இருக்கும். எனக்கு இந்த மூன்று ராகங்களின் ஸ்வரங்கள் தெரிந்தாலும் இந்த மூன்றையும் பிரித்தரியும் அறிவு இன்னும் வரவில்லை!! ஹிஹிஹிஹி. என் சின்ன அறிவுக்கு பூபாளம் னு நினைச்சாலும் இது பௌளி போலவும் இருக்கோன்னு சந்தேகம்.

=====================================================

## தனியாக வந்த சிறுவன்

1) நிஜமோ, பொய்யோ... அவர்கள் இதைதான் முதலில் கண்டுபிடித்தார்களோ என்ன அரசியலோ... இன்றைய அளவில் இது கொஞ்சம் முக்கியத்துவம் பெறும் செய்தி...

கொரோனா வைரசுக்கு எதிரான தடுப்பு மருந்தை மனிதர்கள் மீது பரிசோதிக்கும் முதற்கட்ட சோதனை வெற்றியடைந்ததாக சீனா அறிவித்துள்ளது.




2) ஐ.ஏ.எஸ்., லட்சியத்துடன் தேர்வுக்கு தயாரான நான், இரண்டாவது முறையாக எழுதிய தேர்விலேயே வெற்றி பெற்றேன்.மொத்தம், 577 ஆண்கள், 182 பெண்கள் என, மொத்தம், 759 பேர் தேர்வானதில், நான், 410-வது இடம் பிடித்தேன். இதன் மூலம், கேரளாவின், வயநாடு மாவட்டத்திலிருந்து தேர்வாகும் முதல் ஐ.ஏ.எஸ்., என்ற பெருமை பெற்றேன்.....



ஐ.ஏ.எஸ்., அதிகாரியாகியுள்ள, கேரளாவின், குரிசியா என்ற பழங்குடியின பெண் ஸ்ரீதன்யா.

3) கோவையைச் சேர்ந்த அரசுப் பள்ளி ஆசிரியர்கள், தங்களிடம் படிக்கும் ஏழை மாணவர்களின் குடும்பங்களுக்கு, ரூ.650 மதிப்பிலான மளிகைப் பொருட்கள் வழங்கி, உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.



4) வீட்டை விட்டு பக்கத்து கடைக்கோ அல்லது தெருவுக்கோ விளையாடச் சென்றால் வழிதெரியாமல் குழந்தைகள் திகைக்கும் போது, நெகிழ வைக்கும் சம்பவம்... "முகத்தில் முகக்கவசம், கையில் கையுறை அணிந்து, ஸ்பெஷல் கேட்டகரி என்ற அட்டையைச் சுமந்து, சிறிய சூட்கேஸ் பிடித்து சர்மா வெளியே வந்தார். சிறப்புப் பிரிவில் பயணித்தார். இந்தத் தகவல் அறிந்த பெங்களூரு கெம்பகவுடா விமான நிலைய நிர்வாகம் தனது ட்விட்டர் தளத்தில், “விஹான் சர்மாவை வரவேற்கிறோம். அனைத்துப் பயணிகளையும் பாதுகாக்க பெங்களூரு விமான நிலையம் தொடர்ந்து பணியாற்றும்” என ட்விட்டரில் தெரிவித்தது..."

எனக்கு கு. கு ஞாபகம் வந்தது.






**5) மொத்த கிராமமே எல்லைக்கு வந்து கண்ணீர் மல்க இருவரையும் வரவேற்றது.**

**பதினைந்து வயது பெண் 1200 கிமீட்டர் தூரம் சைக்கிளில் அப்பாவை வைத்து ஓட்டிக்கொண்டு வந்த விஷயம் வேகமாகப் பரவ மொத்த மீடியாவும் கிராமத்தில் குவிந்துவிட்டனர். ஜோதி குமாரி!**




**6) டில்லியை சேர்ந்த பப்பன் கெக்லாட் என்ற பண்ணை விவசாயி, காளான் விவசாயம் செய்து வந்தார். அவரது பண்ணையில், பீகாரை சேர்ந்த 10 பேர் வேலை செய்து வந்தனர். இந்நிலையில் ஊரடங்கால் தனது சொந்த ஊருக்கு செல்ல விரும்பிய அவர்களுக்கு விமானத்தில் டிக்கெட் எடுத்து கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். கெக்லாட் விமான டிக்கெட்டுக்காக சுமார் 68 ஆயிரம் ரூபாய் செலவிட்டதுடன், தொழிலாளர்களின் செலவுக்காக தலா ரூ.3 ஆயிரமும் கொடுத்து அனுப்பி உள்ளார்.**




==>> (பதிவுகளை PDF வடிவில் படிக்கும்போது, சுட்டிகள் வேலை செய்யாது. சுட்டிகளின் மூலம், விவரம் படிக்க, எங்கள் ப்ளாக் பதிவின் மூலமாகத்தான் படிக்க இயலும்)
==============================================================================

## மனதில் ஓர் மணி மண்டபம்



ரமா ஸ்ரீநிவாசன்

“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று” என்ற திருக்குறளையே புரட்டிப் போடும் அளவிற்கு ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் தோன்றி தன் சுய முயற்சியால் முன்னேறி இன்று எல்லா எழுத்தாளர்களுக்கும் ஒரு முன்னோடியாய் திகழும் எழுத்தாளர் லக்ஷ்மிக்கு நாம் ஒரு மணி மண்டபமே எழுப்பலாம். ஆனால், என்னால் முடிந்தது நான் அர்ப்பணிக்கும் இச்சிறு கட்டுரை.




எஸ்.திரிபுரசுந்தரி என்கிற லக்ஷ்மி அவர் காலத்தின் ஸ்டார் எழுத்தாளர் என்று மிதப்புடன் கூறலாம். ஏனெனில் அவர் தமிழ் மண்ணைச் சேர்ந்தவர். ஒரு பத்து வருஷங்களாவது பெண்களின் மன நிலையை உண்மையாக எழுத்தில் கொண்டு வந்தார். அவர் பின் பற்றிய

பாதை ஒன்றே – "பத்தினிக்கு இன்னல் வரும் ஆயின் முடிவில் தீரும்".
இக் கருத்தை ஐம்பதுகளின், அறுபதுகளின் மத்திய தர வர்க்க, வேலைக்கு போக ஆரம்பித்த பெண்கள் அனைவரும் உள் வாங்கும்படி அவர்களின் மனம் கவரும் வண்ணம் சித்தரித்தார். எனவே, 1960களிலும் 1970களிலும் வீட்டிக்கு வீடு மிகப் பழக்கமாகவும் பிரபலமாகவும் திகழ்ந்த எழுத்தாளர் லக்ஷ்மி என்றால் அது மிகையாகது.

அவர் இயற் பெயர் எஸ்.திரிபுரசுந்தரியானாலும் கதை எழுதுவதற்காக புனையப் பட்ட பெயர் 'லக்ஷ்மி'. தமிழ் மண்ணான சிதம்பரத்தில் பிறந்த இவர் பள்ளிப் படிப்பை ஹோலி க்ராஸ் பள்ளியிலும் பின்னர் மேற் படிப்பான மருத்துவப் படிப்பை சென்னை ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரியிலும் முடித்தார். இவர் மருத்துவம் படித்த காலம் இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம். அதன் தாக்கங்கள் எப்படியிருந்தன என்பதை 'கதாசிரியையின் கதை' என்ற தமது சுய சரிதத்தில் விவரமாக எழுதியிருக்கிறார் லக்ஷ்மி. லக்ஷ்மியின் சுயசரிதையை படித்தால்தான் புரியும் அவருடைய இலக்கிய சாதனையைத் தாண்டி அவருக்கு வாழ்க்கை பல இடங்களில் முட்பாதையாக இருந்தது என்பது.

பதினான்கு வயதிலேயே எழுத ஆரம்பித்த லக்ஷ்மி நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் படைப்பிலக்கியம் செய்து, ஆயிரத்துக்கும் மேலான சிறுகதைகள், நூற்றுக்கும் மேலான நாவல்கள் வெளியிட்டுள்ளார். மருத்துவம், மகப்பேறு போன்ற பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். வானொலி நாடகங்களும் எழுதியுள்ளார்.

மார்ச் மாதம் 1940ல் லக்ஷ்மியின் முதல் சிறு கதை "தகுந்த தண்டனையா?" ஆனந்த விகடன் நாளிதழில் வெளியானது. இது தந்த உற்சாகத்தில் அவர் பல சிறு கதைகளை கட்டவிழ்த்து விட, அவை ஆனந்த விகடனிலேயே வெளியாயின. இப்படித்தான் அவரது எழுத்தாளர் பயணம் தொடங்கியது. அவருடைய முதல் நாவல் "பவானி"யும் ஆனந்த விகடனில்தான் வெளியானது.

1955ல் அவர் கண்ணபிரான் என்பவரை மணந்துக் கொண்டு தென் ஆப்பிரிக்காவிற்கு குடி பெயர்ந்தார். இருபது வருடங்களுக்குப் பிறகு அவர் கணவர் இறந்த பின், 1977ல் இந்தியாவிற்கு திரும்பி, முழு நேர எழுத்தாளராக மாறினார். பல சாதனைகளை எழுத்து வடிவாக இலக்கியமாக படைத்த லக்ஷ்மி அவர்கள் 1987ல் காலமானார்.

லக்ஷ்மி ஒரு மிகச் சிறந்த நிறைவான எழுத்தாளர். அவருடைய நாவல்களான "பெண் மனம்" மற்றும் "மிதிலா நிவாஸ்" 'தமிழ் வளர்ச்சி கழகம்' பரிசைத் தட்டிச் சென்றன.


மிதிலாவிலாஸ் நாவலில் மாமன் வீட்டில் வளரும் தேவகி ஏறக்குறைய வேலைக்காரிதான். அவளுக்கு மாமன் மகன் ஈஸ்வரன் மேல் ஈர்ப்பு, ஈஸ்வரனோ கிரிஜா பின்னால். தேவகியின் நல்ல குணம் எல்லார் மனதையும் மாற்றி, பிறகென்ன, சுபம்தான்! சரளமாகவும் நிதானமாகவும் போகும் நாவல் புத்தகத்தை கீழே வைக்க முடியா வண்ணம் விறுவிறுப்பான நடை கொண்டது.




1984ல் இந்திய அரசு அவருடைய நாவலான "ஒரு காவேரியைப் போல"விற்கு "ஸாஹித்யா அகாடமி" விருதையளித்து கௌரவித்தது. இருந்தும் என் மனதில் பெரும் தாக்கத்தையும் கெட்டியான இடத்தையும் பிடித்தது அவரது நாவல் 'ஸ்ரீமதி மைதிலி'தான். அவரது வழக்கமான கதைதான். மைதிலியை அடக்கி ஆளும் அத்தனை பேரும் கடைசியில் அவளிடமே வந்து கெஞ்சி கூத்தாடி உதவி பெறுகிறார்கள். ஆனால், அவர் மைதிலி என்னும் கதாபாத்திரத்தை வடித்த விதமும் கொண்டு சென்ற பாணியும் என்னை மிகவும் ஈர்த்தது. ஒவ்வொரு வீட்டிலுமுள்ள பெண்களின் சொல்ல முடியாத இன்னல்களை மிக நேர்த்தியாகப் படம் பிடித்துக் காட்டியிருந்தார்.




காஞ்சனையின் கனவு, பெண் மனம் என்ற நாவல்கள் காஞ்சனா, இருவர் உள்ளம் என்ற தலைப்புகளுடன் மூன்று தென் மொழிகளில் திரைப் படங்களாயின. இருவர் உள்ளம் படம் வெகு சிறப்பாகவும் அழகாகவும் எடுக்கப் பட்டு சக்கை போடு போட்டது. இப்படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதியது முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி.




அவரது கதைகள் யாவுமே பெண் இனத்தைச் சுற்றி வந்தன.

ஆயினும் அவரது பெண் சித்திரங்கள் பலவீனமானவர்களாக சித்தரிக்கப் படவில்லை. அப்பெண்கள் பாதிக்கப் பட்டவர்களாக இருந்தாலும் தைரியமாகவும் நேர் பாதையில் செல்பவர்களாகவுமே இருந்தார்கள். அவரின் நாவல்களில் முத்திரைக் குத்திய வில்லிகளும் அடக்கம். அவ் வில்லிகள் உபயோகிக்கும் சில சொற்களும், வாக்கியங்களும் லக்ஷ்மியின் சிறு கதைகளுக்கும் நாவல்களுக்கும் சொந்தமாகிப் போயின.

லக்ஷ்மியின் எல்லாக் கதைகளுக்கும் மேலும் மெருகு சேர்த்தது கலைஞர் கோபுலுவின் சித்திரக் கைவண்ணம்தான். அவருடைய எழுத்தும் இவருடைய சித்திரமும் போட்டிப் போட்டுக் கொண்டு யாவர் மனதிலும் பசு மரத்தாணி போல் பதிந்தன.

லக்ஷ்மியின் கதைகளில் வரும் ஆண்கள் பெரும்பாலும் மென்மையாகவும் கம்பீரமாகவும் சித்தரிக்கப் பட்டார்கள். தோள் கொடுக்கும் வயது முதிர்ந்த ஆண்கள் நல்லவர், கெட்டவர், வில்லன் என எல்லா வர்ணங்களிலும் இருந்தார்கள்.

முடிவு வரை, லக்ஷ்மி ஒரு நேர்மறையான எழுத்தாளராகவே திகழ்ந்தார். அவர் கதைகளில் என்றுமே நல்லவையே ஜெயிக்கும். காதல் அனுபவங்களும் மென்மையாகவும் மரியாதையாகவும் பட்டும் படாமலும் சித்தரிக்கப் பட்டதால், படிப்பவரின் கற்பனை சிறகடித்துப் பறந்தன.

எழுத்தாளர் லக்ஷ்மியின் கதை நடை தெளிவானதும் நகம் கடிக்கும் சுபாவத்தை கொடுப்பதாகவும் அமைந்திருந்தது. அவருடைய எழுத்துக்கள் என்றுமே பெண்ணுரிமைக்கு முன்னுரிமை தந்தன. அவருடைய கதாநாயகிகள் யாவரும் நெறி தவறாமல் உண்மையான வழியில் சென்று முடிவில் ஜெயிப்பதாகவே இருக்கும். அவர் தீட்டிய எழுத்தோவியங்கள் யாவுமே எளிமையாகவும் ஆயின் அழுத்தமாகவும் இருந்தன.

அவரது கதாபாத்திரங்கள் யாவரும் லக்ஷ்மியின் விசிறிகளின் மனதில் இன்று வரை குடி கொண்டிருக்கின்றார்கள். இன்றும் அவரது கதைகளும் நாவல்களும் தேடிப் பிடித்து படிக்கப் படுகின்றன என்பதே இதற்கு ஓர் பெரிய அங்கீகாரமாகும்.

சென்னையில் 1987ம் வருஷம் ஜனவரி மாதம் ஏழாம் தேதி எல்லோர் மனதிலும் இடம் பிடித்த எழுத்தாளர் லக்ஷ்மி இயற்கை எய்தினார். அவரது மறைவு குறித்து ஆனந்த விகடனில் (25-1-1987 – மீள் பதிப்பு ஆ.வி.11-3-2009) பட்டம்மாள் வாசன் நினைவு கூர்ந்தது மிகவும் எழுச்சியாகவும் தொடர்புடையதாகவும் இருந்தது :

“வாழ்க்கையில் நிறையச் சிரமப்பட்டிருந்தாலும், அவ பேசறப்போ சிரிச்சுண்டேதான் பேசுவா. சாகித்ய அகாடமி பரிசு வாங்கியதும் என்னைத் தேடி வந்து சொன்னது எனக்குப் பெருமையா இருந்தது. சமீபத்திலே எங்க வீட்டுக் கல்யாணத்துக்கு வந்திருந்தபோது ‘என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணப் போறேன்’ என்று ரொம்ப சந்தோஷமாச் சொன்னாள். அவ சாகும்போது, அந்த ஒரே பிள்ளையும் துரதிர்ஷ்டவசமா கிட்டக்க இல்லாம எங்கேயோ இங்கிலாந்திலேயா இருக்கணும்னு நினைச்ச போது என் மனசுக்கு கஷ்டமாயிருந்தது” என்று சொல்லும்போதே திருமதி பட்டம்மாள் வாசனின் குரல் தழுதழுத்துக் கண்கள் பனித்தன.

இவரைப் போல சிறந்த எழுத்தாளர்கள் இன்னும் நிறைய பேர் உருவாக வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அதே போல், இந்தத் தலைமுறை இளைஞர்களும் வாட்ஸ் ஆப், ட்விட்டர், முகநூல் பார்ப்பது போல் நல்ல கதைகளையும், கட்டுரைகளையும் படிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றேன்.

================================

வல்லிசிம்ஹன்:

அனைவருக்கும் இனிய காலை வணக்கம்.
பாசிட்டிவ் செய்திகள் அனைத்தும் மனதிற்கு மிக ஊக்கம் அளிக்கின்றன்.
தந்தையை அழைத்து வந்து சைக்கிள் ராணி ஜோதி குமாரிக்கு முதல் பரிசு.
வீராங்கனைகள் இப்படித்தான் உருவாகிறார்கள்.
நினைக்க நினைக்கப் பெருமை.

மூன்று மாதம் பிரிந்திருந்த விஹானுக்கு அன்பும் ஆசிகளும்.
தனியே விமானத்தில் வந்திருக்கிறான் அதற்கும் பாராட்டுகள்.

காளான் பண்ணை பப்பன் கெய்க்வாட் போற்ற வேண்டிய மனிதர்.
ஊருக்கு இவர் போல பத்து மனிதர் இருந்தால் போதும்
பல நூறு மக்கள் நன்மை அடைவார்கள்.

***

Geetha Sambasivam :

**மருத்துவப் படிப்பிற்கான மேற்செலவுக்காகக் கதைகள் எழுத ஆரம்பித்ததாக "லக்ஷ்மி" ஒரு பேட்டியில் சொல்லி இருந்த நினைவு. ஆரம்பகாலங்களில் தந்தைக்குத் தெரியாமலேயே எழுதி வந்ததாகவும், அதனாலேயே தன் பெயரை "லக்ஷ்மி" என்னும் புனைப்பெயரில் மாற்றிக் கொண்டதாகவும் சொல்லி இருக்கிறார். அவர் எழுத்துக்களில் எனக்கு மிகவும் பிடித்தது "அரக்கு மாளிகை" நாவலும் அவர் தென் ஆப்ரிக்கா போய்த் திரும்பியதும் எழுதிய பயணக்கட்டுரை, "இருண்ட கண்டத்தில் எட்டு ஆண்டுகள்" இரண்டும் பிடித்தவை.**

=====================================

ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் சனிக்கிழமை வரை வெளியாகும் பதிவுகள், பதிவு சம்பந்தப்பட்ட விமரிசனக் கருத்து முதலில் வருபவை இரண்டு அல்லது மூன்று கருத்துரைகள் மட்டும் மின் நிலாவில் பதிவுப் பகுதியின் கீழே வெளியிடுகிறோம். எல்லாக் கருத்துரைகளையும் படிக்க, எங்கள் ப்ளாக் தளத்திற்குச் செல்லவும்.

========================================

நன்றி.

மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

இந்த மின் நிலா 002 பற்றிய உங்கள் கருத்துகளை,

**engalblog@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

========================================

